**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.285** **நாள் : 22.09.2025**

**மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், சென்னை பள்ளிகளுக்கு 2,300 புவிக்கோளங்களை (Globe) வழங்கினார்.**

மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், சென்னை பள்ளி மாணவர்களின் புவியியல் கற்றல் திறனை மேம்படுத்திடும் வகையில் 2,300 புவிக்கோளங்கள் (Globe) வழங்கும் விதமாக, 20 சென்னை பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு புவிக்கோளங்களை இன்று (22.09.2025) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

மாண்புமிகு மேயர் அவர்களின் 2025-26ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பில், சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர் புவியியல் பாடத்தினை எளிதாக கற்கும் வகையில், ஒவ்வொரு வகுப்பறைக்கும் தலா ஒரு புவிக்கோளம் வீதம் 2,300 வகுப்பறைகளுக்கு மொத்தம் ரூ.39.10 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், மாணவர்களின் புவியியல் கற்றல் திறனை மேம்படுத்த மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள அனைத்து சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைக்கு ஒன்று வீதம் 2,300 புவிக்கோளங்கள் மாண்புமிகு மேயர் அவர்களால் இன்று வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு.ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் திரு.த.விசுவநாதன், உதவி கல்வி அலுவலர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**